திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், வளையாம்பட்டு மற்றும் மேலமங்கலம் ஊராட்சியில் புதிய நியாய விலை கட்டிடத்தை முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ திறந்து வைத்து பயனாளிகளுக்கு பொருள்களை வழங்கினார். விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொதுச் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், ஒன்றிய நிர்வாகிகள் MJ.கிருஷ்ணமூர்த்தி, சடகோபன், மோகன்ராஜ் , ஏழுமலை, மற்றும் கழக நிர்வாகிகள் அரசு துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு திராவிட மாடல் ஆட்சியின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் முத்தையாபுரம் பகுதி சார்பில் 08.05.2025 வியாழக்கிழமை, மாலை 6.00 மணி அளவில் முத்தையாபுரம் பல்க் பஜாரில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன் தலைமையில் நடைபெற்றது. மாநகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்த சேகரன் மற்றும் தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி முன்னிலை வகித்தனர். இந்த கூட்டத்தில் கவிஞர். சு.த.மூர்த்தி பேசினர். ஜி.ஜெயக்குமார், எஸ்.சுரேஷ்குமார், டிஎ.ரவீந்திரன், தொ. நிர்மல்ராஜ், பி.பி.ராமகிருஷ்ணன், பகுதி செயலாளர்கள் கலந்து கொண்டனர். முத்தையாபுரம் பகுதி செயலாளர் டி. மேகநாதன் வரவேற்புரை வழங்கினார்.

ஒன்றிய செயலாளர் பழனி தலைமை!

மரக்காணம் மேற்கு ஒன்றியத்தில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. – செங்கல்பட்டு சீனிவாசன் சிறப்புரை!

திண்டிவனம், மே 12 - விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்ற தொகுதி மரக்காணம் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு "சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் மானூர் மன்னார் சாமி கோவில் கலைஞர் திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மரக்காணம் ஒன்றிய துணைப் பெருந்தலைவரும் மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளர் பழனி தலைமை தாங்கினார்.

ஒன்றிய நிர்வாகிகள் ரவிக்குமார்,மீனா குமாரி ,முருகன், ஆதிகேசவன், தேவதாஸ், மானூர் ஊராட்சி மன்ற தலைவர் ரமேஷ், மானூர் ஒன்றிய கவுன்சிலர் மகாலட்சுமி காளிதாஸ்,மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் செந்தில்குமார், மாவட்ட கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் சிவகுமார், கிளை செயலாளர்கள் பச்சையப்பன், வாசுதேவன், அஜய் சேகர், ராபர்ட், சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய அவை தலைவர் குமார், மாவட்ட பிரதிநிதி ராமமூர்த்தி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் செங்கல்பட்டு சீனிவாசன், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில்மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன்,

விழுப்புரம் வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் சீனி ராஜ், மாவட்ட ஆதிதிராவிட நல அணி அமைப்பாளர் திருமலை, முன்னாள் ஒன்றிய செயலாளர் காளிதாசன்,

மாவட்ட கவுன்சிலர்கள் விஜயன், ஒன்றிய கவுன்சிலர்கள் வேலாயுதம், கன்னியம்மாள், அமுதா கிருஷ்ணமூர்த்தி, திருநாவுக்கரசு, மகாலட்சுமி காளிதாஸ், விநாயகம் உள்ளிட்ட ஊராட்சி மன்ற தலைவர்கள் மானூர் ஊராட்சி கழக நிர்வாகிகள் வழக்கறிஞர் கோகுல், சேகர் ,செங்கேணி, கதிரவன் ,தர்மராஜா, செல்வகுமார், கோபிகிருஷ்ணன், கலைமணி. டேங்கு ஏழுமலை, வல்லரசுஉள்ளிட்ட திமுக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள் ,துணை அமைப்பாளர்கள், கழக மூத்த நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மானூர் தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் கலைமணி நன்றி கூறினார்.

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தொகுதி மேற்கு ஒன்றியம் பீஞ்சமந்தை ஊராட்சியில் புதிய நியாயவிலை கடையை மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. திறந்து வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, ஊராட்சி குழுத்தலைவர் சி.பாஸ்கரன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் என்.பிரகாஷ் ,ஒன்றிய கவுன்சிலர் ராஜசேகரன் ஊராட்சி மன்ற தலைவர் ரேகா மற்றும் கழக நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் மேற்கு ஒன்றியத்தில் கழக அரசின் பொதுக்கூட்டம் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இப்பொதுக்கூட்டத்தில் அ.தே.முருகையன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தென்காசி தெற்கு மாவட்டம்

இளைஞர் அணி ஒன்றிய , நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் வே.ஜெயபாலன் தலைமை!

தென்காசி, மே 12 - தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க இளைஞரணி சார்பில் தென்காசி தெற்கு மாவட்டம் ஒன்றிய,நகர, பேரூர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம்

தென்காசி கோல்டன் ஹாலில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தென்காசியில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட தெற்கு மாவட்ட தி.மு.க இளைஞரணி ஒன்றிய,நகர, பேரூர் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் கோல்டன் ஹாலில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா முன்னிலை நடைபெற்றது.மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.ஆர்.கிருஷ்ணராஜா வரவேற்புரையாற்றினார். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கிருஷ்ணராஜ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் மாநில செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி,சமூக வலைதள பயிற்சியாளர் விக்னேஷ் விஜய் ஆனந்த் ஆகியோர் சிறப்பு விருந்தினராக பங்கேற்று சமூக வலைதள பயிற்சி அளித்தனர்.

நிகழ்வில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சிவக்குமார், ஐவேந்திரன் தினேஷ், சுப்பிரமணியன்,ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம்,பேரூர் செயலாளர் லட்சுமணன்,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஜெ.கே.ரமேஷ், குற்றாலம் பேச்சிமுத்து, குற்றால நாதர் கோவில் அரங்காவலர் குழு உறுப்பினர்கள் வீரபாண்டியன்,சுந்தரராஜன் உள்பட தென்காசி தெற்கு மாவட்டத்தின் ஒன்றிய,நகர,பேரூர் அமைப்பாளர் கள்,துணை அமைப்பாளர்கள் என சுமார் 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முகமது அப்துல் ரஹீம் நன்றியுரை யாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒன்றிய,நகர,பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை வாழ்த்தி வரவேற்று அவர்களை ஊக்கப்படுத்தி இளைஞர் அணி பணிகளை மாவட்ட கழகத்தின் ஒப்புதலோடு, மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்களின் ஒத்துழைப்போடு சிறப்பாக மேற்கொள்வது.

கழகத் தலைவர் தளபதியார் அவர்கள்,இளந்தலைவர் அவர்களின் சூழுரைபடி 2026 சட்டமன்ற பொது தேர்தலில் 200 க்கும் அதிகமான தொகுதிகளில் நமது கழகம் வெற்றி பெற இளைஞர் அணியினர் தீவிரமாக கழகப் பணி மேற்கொள்ள வேண்டும்.

வரும் ஜூன் மாதம் 3ம் தேதி அன்று வரவிருக்கும் நவீன தமிழ்நாட்டின் முத்தமிழறிஞர் கலைஞரின் அவர்களின் பிறந்த நாளை யொட்டி தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் இளைஞர் அணியினர் சார்பில் ஏழை, எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுவது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் புத்துகோவில் அருகில் கழக அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர், க.தேவராஜி எம்எல்ஏ, தலைமைகழக பேச்சாளர் லயோலா த.ராஜசேகர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள் மாவட்ட துணை செயலாளர் ஆ.சம்பத்குமார், ஒன்றிய செயலாளர்கள் கவிதாதண்டபாணி, உமாகன்ரங்கம் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மு.க.அருள்நிதி, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் எஸ்.ராஜா, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எம்.சிங்கார வேலன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஆர்.சுதா, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் சி.மஞ்சுளா, ஒன்றிய கழக நிர்வாகிகள் கோபிநாதன், பொன்னுசாமி, வைரமணி,வள்ளிகண்ணன், திருப்பதி, பாலாஜி, சாமுடி, எழிலரசிகுமார், மாவட்ட கவுன்சிலர் சிந்துஜா, மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் மோகன்ராஜ் மற்றும் கழக முன்னோடிகள், நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா வி.எஸ். லட்சுமணன்

மே 12 (2009)

இளமைப் பருவம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

திண்டுக்கல் ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து 18 ஆண்டுகளும் – திண்டுக்கல் மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சிறுமலை ஊராட்சி மன்றத் தலைவராகவும், திண்டுக்கல் கூட்டுறவு நிலவள வங்கி தலைவராகவும், மாநில கூட்டுறவு நிலவள வங்கி இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசாவில் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எஸ்.ஜே. சாதிக்பாட்சா

மே 12 (1994)



தி.மு.க. பொருளாளராக 1977ஆம் ஆண்டு முதல் பொறுப்பு வகித்தவர். அண்ணா, கலைஞர் அமைச்சரவைகளில் அமைச்சராகப் பணியாற்றியவர்.

சட்டமன்ற உறுப்பினராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

"கழகத்தின் வெற்றியிலும் – தோல்வியிலும் – சோதனையிலும், சாதனையிலும் – கொடிய வெயிலிலும், நிழலிலும் கூடவே இருந்து அசையாத மலையாக எதற்கும் ஊசலாடாத இதயத்துடன் நமக்கு துணையாக இருந்த தங்கத்தூண் சாய்ந்து விட்டதே" என தலைவர் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

1986ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும்விழாவில், இவருக்கு கலைஞர் விருது வழங்கி சிறப்பித்தார் கலைஞர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.